Registered as a Newspaper

Zoology 87 A/L
திரு. நாகநாதன்
முளையியல்
Sat , Sun : 8 30-9.30
Tues , Thu: 3.00-5.00
பாகுபாடு
Sat & Sun: 10.30-11.30
Saturday: 6.30-8.30
New Master
INSTITUTE
B. M C. Lane,
JAFFNA

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

Botany 87 A/L
திரு. குகாதரன்
Sat. & Sundays
9.30-10 30
இனப்பெருக்கம்
2.30-3 30
பிறப்புரிமையியல்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மார்கழி மீ 21 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 4 (05 01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 34

## பஸ்கொள்ளை: மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜன 5 நேற்று முன்தினம் சனிக்கிழமை நெடுங்கேணிப் பகுதியில் நடைபெற்ற பஸ் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மூன்று தமிழ் இளைஞர்களை நேற்று விடுதலைப் புலிகள் கைது செய்தனர்.

பஸ் கொள்ளை தொடர்பாக பொது மக்கள் புலிகளிடம் முறையிட்டதை அடுத்து வசந்தபுரம் பகுதியை புகலிச் சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

இச் சோதனையின் போது மூன்று இளைஞர் கைது செய்யப்பட்டனர். ஏனையோர் தலைமறைவாகி விட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கைக்குண்டுகளும் மீட்கப் பட்டுள்ளன.

புலிகள் ஒலிபெருக்கி மூலம் கொள்ளையர்களைச் சரணடையுமாறு அறிவித்துவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது (இ-10)

## வடபகுதி மின் விநியோகம் 5 தினங்களுக்கு துண்டிப்பு?

கொழும்பு, ஜன. 5 முறிகண்டியில் குண்டு வெடிப்பினால் சேதமடைந்த இரண்டு மின் விநியோக 'பைலன்களை' பூரணமாகத் திருத்துவதற்கு வட பகுதிக்கான மின் விநியோகம் ஐந்து நாட்களுக்குத் துண்டிக்கப்பட்டாக வேண்டும்.

முறிகண்டிச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய கமிட்டி ஒன்று மேற்கண்ட சிபார்சை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது.

குண்டு வெடித்த சம்பவத்தைத் தொடர்ந்து சேதமடைந்த 'பைலன்கள்' திருத்தப்பட வேண்டும்; கொன்கிரீட் தூண் கட்டப்பட வேண்டும் - இவற்றை எல்லாம் செய்து முடிக்க ஐந்து தினங்களாவது செல்லும். வட பகுதிக்கான மின் விநியோகத்தைத் துண்டித்துவிட்டே இவ் வேலைகளை நிறைவேற்ற முடியும்-இப்படி இக்கமிட்டி அரசுக்கு அறிவித்திருக்கிறது.

முறிகண்டியில் மின் வயர்களைத் தாங்கிய இரண்டு 'பைலன்கள்' குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன என்றும் அதைத் தொடர்ந்து யாழ் குடாவுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு விட்டது என்றும் ரூபவாஹினி அறிவித்தது தெரிந்ததே.

எனினும் அந்த அறிவிப்பின்படி வட பகுதி மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருக்கவில்லை.

தற்போது சேதமடைந்த இரண்டு 'பைலன்'களைப் பூரணமாகத் திருத்தி அமைக்க ஐந்து தினங்களுக்கு வட பகுதி மின் விநி (4-ம் பக்கம் பார்க்க)

## நகரில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம் ஜன 5 யாழ்நகர்ப் பகுதியில் நேற்று இரவு ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

இரவு ஏழு மணியளவில் யாழ்கோட்டையில் இருந்து மேற்கொள்ளப் பட்ட ஷெல் குண்டுகள் கொட்டடிப் பகுதியிலும், தபால் கந்தோர் பகுதியிலும் விழுந்து வெடித்தன என்று தெரிவிக்கப்படுகிறது. இ(-10)

## நாவற்குழியில் சிப்பாய்கள் வெளியேற முயற்சி

யாழ்ப்பாணம், ஜன 5 நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து நேற்று வெளியேற முற்பட்ட சிப்பாய்களை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

நேற்றுப் பகல் ஒரு மணியளவில் இச்சம்ப (4ஆம் பக்கம் பார்க்க)

## லைசென்ஸ் கட்டணம் செலுத்தினால்—

# கோட்டையில் பேர்மிட்

# காங்கேசனில் எரிபொருள்

### அரசின் புதிய யோசனை இது

கொழும்பு. ஜன, 5

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாகனங்களுக்கு எரி பொருள் வழங்குவதற்கு புதிய திட்டம்ஒன்றை நடைமுறைப்படுத்துவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

அரச மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வாகனங்களைப் பதிவு செய்த, வருடாந்த லைசென்ஸ் கட்டணத்தைச் செலுத்திய மோட்டார் வாகன உரிமையாளர்களுக்கு கோட்டை முகாமில் பெர்மிட் வழங்கி, காங்கேசன்துறை, முகாமில் வைத்து எரிபொருள் விநியோகிக்கும் திட்டமே அதுவாகும்.

அரசுக்கு லைசென்ஸ் கட்டணம் செலுத்தியதையும் வாகனப் பதிவு செய்ததையும் நிரூபிக்கும் தஸ்தாவேஜுகளைச் சமர்பித்த பின்னரே அவர்களுக்கு எரிபொருள் பெர்மிட் வழங்கப்படும்.

இத் தஸ்தாவேஜுகளை யாழ் கோட்டை முகாமில் சமர்ப்பித்து பெர்மிட் பெற்றுக் கொண்டவர்கள் பின்னர் காங்கேசன்துறை சென்று அங்குள்ள ஆயுதப்படை முகாமில் எரிபொருளை பெற்றுக் கொள்ள அரசின் புதிய திட்டம் வழி வகுக்கின்றது.

### கப்பலில் வரும்

இதற்காக கப்பல்மூலம் எரிபொருள் காங்கேசன் துறையில் கொண்டு வந்து வைக்கப்படும்.

வட பகுதியில் உள்ள சகல மோட்டார் வாகனங்களும் அரச மோட் (4-ஆம் பக்கம் பார்க்க)

## டாக்ஸி, ஓட்டோ மினிபஸ் கட்டணங்கள் குடாநாட்டில் உயர்வு

யாழ்ப்பாணம், ஜன. 5 யாழ் குடா நாட்டில் டாக்சிகள் ஓட்டோக்கள், மினி பஸ்கள் கட்டணங்கள் நேற்று முதல் அதிகரித்தன

வட பகுதிக்கு அரசு விதித்த எரிபொருள் தடையை அடுத்தே கட்டண உயர்வு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் நேற்று கொழும்பில் இருந்து வந்த பயணிகளால் யாழ் பஸ் நிலையம் நிறைந்து காணப்பட்டது.

தமது இடங்களுக்கு அவர்கள் செல்வதற்கு பஸ் நிலையத்தில் போதிய வாகனங்கள் இல்லாததே இதற்குக் காரணம். (இ-5-10)

முச்சந்தி முனி



எரிபொருளை வெளிப் படையாகத் தடை செய்தினம், மின்சாரத்தை மறைமுகமாய் தடை செய்ய யோசிச்சிருப் பினம் போலை ...

## அக்கரைப்பற்றில் இயக்க மோதல்!

யாழ்ப்பாணம், ஜன. 5 அம்பாறை மாவட்டத்தில் உள்ள அக்கரைப் பற்றுப் பகுதியில் நேற்றிரவு விடுதலைப் புலிகளுக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். போராளிகளுக்கும் இடையில் பலத்த சண்டை நடைபெற்றதாக தெரியவருகிறது

அக்கரைப் பற்றுப் பகுதியை சுற்றிவளைத்த விடுதலைப் புலிகள் விடுவீடாகச் சென்று தேடுதல் (4-ஆம் பக்கம் பார்க்க)

## பண்ணை தாக்குதலில் போராளி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்- பண்ணை பொலீஸ் விடுதியில் இருந்து வெளியேறிய சிப்பாய்களை நோக்கி நேற்று தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

சிப்பாய்கள் நடத்திய பதில் தாக்குதலில் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை பத்து மணி அளவில் பண்ணை பொலீஸ் விடுதியில் இருந்து வெளியேறிய சிப்பாய்கள் தொலைத்தொடர்பு திணைக்களத்தினுள் நுழைந்தனர். பின்பு அங்கிருந்து விடுதலைப் புலிகளின் சென்றியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்பொழுதே புலி இயக்கப் போராளி ஒருவர் காயம் அடைந்தார்.

இதனை அடுத்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய்கள் மீண்டும் விடுதிக்கு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-10)

## வல்வையில் அதிகாலை புலிகள் - சிப்பாய்கள் கடும் சமர்

வல்வெட்டித்துறை, ஜன. 5

நேற்று அதிகாலை சிப்பாய்களுக்கும் புலிகளுக்கும் இடையில் வல்வெட்டித்துறையில் கடும் மோதல் ஏற்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சுமார் 2 45 மணியளவில் வல்வை இராணுவத்தினர் முகாமின் மேற்கு வாயில் வழியாக வெளியேறி வந்தனர்.

மயிலியதனை என்னும் இடத்தில் சிப்பாய்களை இடைமறித்துப் புலிகள் நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

ஒரு மணித்தியாலம் வரை இரு தரப்பினருக்கும் இடையில் கடுஞ் சமர் நடைபெற்றது பின் மின்சாரம் திடீரெனத் தடைப்பட்டதால் சமர் ஓய்ந்தது.

சிப்பாய்கள் இருளோடு இருளாக வல்வை இராணுவ முகாமைச் சென்றடைந்தனர்.

இச்சமரின் போது புலிகள் தரப்பில் சங்கிலித் தொடர் வெடிகுண்டுகள் (செயின் கிரனேட்) முதன் முதலாகப் பாவிக்கப்பட்டன.

சிப்பாய்கள் தரப்பில் துப்பாக்கிகள் ஆட்லறி போன்ற ஆயுதங்கள் பாவிக்கப்பட்டன.

புலிகளின் சங்கிலித் தொடர் வெடிகுண்டுகளின் முன் தாக்குப் பிடிக்க முடியாத சிப்பாய்கள் மின் விளக்குகளை துப்பாக்கி மூலம் சுட்டு உடைத்துவிட்டு இருளினில் தப்பிச் சென்றனர் என்றும் இச் சம்பவத்தின்போது சிப்பாய்கள் தரப்பில் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் இருளிலும் சமர் நடைபெற்றதால் சேதவிவரம் தெரியவில்லை என்றும் புலிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது

சிப்பாய்கள் முகாமைச் சென்றடைந்தபின் முகாமில் இருந்த வண்ணம் சமர் நடைபெற்ற இடத்தை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பதிலுக்குப் புலிக (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களும் நிர்வாகப் பதவி துறப்பு

யாழ்ப்பாணம், ஜன 5 சம்பள உயர்வுக் கோரிக்கையை வலியுறுத்தி யாழ் பல்கலைக் கழக கலைப் பீடம், மருத்துவ பீடம் ஆகியவற்றின் பேராசிரியர்களும் தங்கள் நிர்வாகப் பதவிகளை இன்று (திங்கள்) முதல் துறக்கின்றனர்.

கடந்த 23 ஆம் திகதி எடுத்த தீர்மானத்திற்கு இணங்க இரண்டு பேராசிரியர்களைத் தவிர கலைப் பீடத்தின் ஏனைய ஆசிரியர்கள் நிர்வாகப் பதவிகளைத் துறக்கும் கடிதங்களை ஏற்கனவே சமர்ப்பித்து விட்டனர்,

இத்தகவலை யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. செ. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

மருத்துவ பீடாதிபதி உட்பட மருத்துவப் பேராசிரியர்கள் அனைவரும் நிர்வாகப் பதவிகளைத் துறக்கும் கடிதங்களை இன்று தொடக்கம் கையளிக்க இருப்பதாக மருத்துவபீட ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இதுபற்றிமுடிவு செய்ய விஞ்ஞான பீட ஆசிரியர் சங்கம் இன்று காலை 11 மணிக்கு கூட இருப்பதாக அதன் தலைவர் வண.பிதா இராஜேந்திரா தெரிவித்தார்

சம்பள உயர்வுக் கோரிக்கையை வலியுறுத்தி கொழும்பு, பேராதனை, மட்டக்களப்பு' தும்பறை றுகுணைப் பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள் தங்கள் நிர்வாகப் பதவிகளை இன்று தொடக்கம் துறக்க இருக்கின்றனர் என்பது தெரிந்ததே. (இ-எ)

## இஸ்ரவேல் செல்லும் சிப்பாய்கள்

கொழும்பு, ஜன. 5 வடக்கு. கிழக்கு மோதல்களில் கைகால்களை இழந்த நான்கு சிப்பாய்கள் செயற்கை கைகால்களைப் பொருத்துவதற்காக நேற்று இஸ்ரவேல் சென்றனர்.

இவர்களில் ஒரு சிப்பாய் இரண்டு கால்களையும் இழந்து இருந்தார். (இ-ஐ-எ)

## நேற்றும் ரயிலை தவறவிட்டனர்

யாழ்ப்பாணம், ஜன. 5 நேற்று ஆனையிறவு முகாமில் நடைபெற்ற பலத்த சோதனை காரணமாக மூன்று பஸ்களைச் சேர்ந்த பிரயாணிகள் யாழ் தேவியை தவறவிட்டனர்.

பின்னர் இவர்கள் அனைவரும் வவுனியா அந்தோனியார் கோவிலும், இந்து மன்றத்திலும், உறவினர் வீடுகளிலும் நேற்றிரவு தங்னர். (இ-10)

## அரசு தட்டிக்கழிக்க முடியாதவாறு

## தமிழ்-முஸ்லிம் தலைவர்கள் கூடி தீர்வை முன்வைக்க வேண்டும்

### அஷ்ரப் யோசனை

கொழும்பு, ஜன 5 தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கூடிப் பேசி ஒருமித்த கருத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டும். அப்போது தான் இலங்கை அரசினால் அதைத் தட்டிக் கழிக்க முடியாத நிலை ஏற்படும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் முன் கண்டவாறு கொழும்பில் நடந்த முஸ்லிம் ஆசிரியர் கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்தார்.

மாளிகாவத்தை முஸ்லிம் இளைஞர் கலாசார நிலையத்தில் கடந்த சனிக்கிழமை மாலை நடந்த இக்கருத்தரங்கில் பேசுகையில் ஜனாப் அஷ்ரப் மேலும் சொன்னதாவது;

முஸ்லிம் மாகாண சபைதான் வேண்டும் என்று சிலர் வற்புறுத்துகின்றனர்.

எனது கட்சி முஸ்லிம் மாகாண சபைதான் வேண்டும் என்று வலியுறுத்தவில்லை. வேறுசிறந்த தீர்வு எதுவும் சமர்ப்பிக்கப்பட்டாலும் எனது கட்சி அதைப் பரிசிலனை செய்யத் தயாராக இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை முதலில் முஸ்லிம் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் கூடிப்பேசி காணவேண் (4-ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் 2 வது நாளக போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம். ஜன. 5 யாழ்-குடாநாட்டில் இரண்டாவது நாளாக நேற்றுப் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை, யாழ் தேவி இணைப்பு பஸ் சேவையை மட்டும் நேற்று நடத்தியது.

உள்ளூர் போக்குவரத்துகள் பெரும்அளவு நிறுத்தப் பட்டிருக்கின்றன.

தனியார் பஸ்களும் பெரும்பாலானவைதமது சேவையை நிறுத்திக் கொண்டன.

மிகக்குறைந்தளவு பஸ்களே நேற்று சேவையில் ஈடுபட்டன.

எரிபொருள் நிலையங்கள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டீசல் நேற்று வரை வடபகுதிக்கு கொண்டுவர அனுமதி வழங்கப்படவில்லை.

இதனால் யாழ்தேவி இணைப்புச் சேவையும் நிறுத்தப்படும் நிலைமை உருவாகியுள்ளது. (இ-10)

### சுபநேரம்

05 01–1987
திங்கட்கிழமை
சுபநேரம்:
12 31 முதல் 2 01 வரை
ராகுகாலம்:
8.01 முதல் 9.31 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஷஷ்டி விரதம்

## ● அசோக சக்கரவர்த்தி கால அரசு

கொழும்பு, ஜன. 5 அசோக சக்கரவர்த்தி காலத்தில் இந்தியாவில் இருந்தது போன்ற ஒரு அரசாங்கத்தை இங்கு நாம் அமைக்க வேண் (4ம் பக்கம் பார்க்க)

## இந்திய மத்தியஸ்தம் தொடர வேண்டும்

### தொண்டமான் கூறுகிறார்

சென்னை, ஜன.4 இலங்கை இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண இந்தியாவின் மத்தியஸ்த முயற்சிதொடர வேண்டும்

அமைச்சர் திரு எஸ் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் நாடு சட்டமன்ற கலம் என்னும் இடத்தில் அமைச்சர் செய்தியாளர் மத்தியில் பேசினார்:

தமிழர் அமைப்புக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான இடை வெளியைக் குறைக்க இந்தியா முயற்சிக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலி (4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★★★★★★★★★★
★ சின்னஞ் சிறு ★
★ விளம்பரங்கள் ★
★★★★★★★★★★

**விற்பனைக்கு**

உடுவில் டச்ரோட்டிற்கு அருகாமையில், வீடு கட்டுவதற்குகந்த 6½ பரப்புச் சதுரக்காணி கிணற்றுடன் விற்பனைக்குள்ளது. ஜெயராசசிங்கம், நவீன சந்தை ஒழுங்கை, வட்டுக்கோட்டை.

சிறிதளவே பயன்படுத்தப்பட்ட Sansui tuner AMP, Cassette Deck, Record Player, Speakers ஆகியனவும் Westpoint 6.9cftu.Deep Freezer ம் விற்பனைக்குள்ளன. விளம்பரதாரர் M66, dyn ads, 476, பிரதான வீதி, கண்டுக்குளி (சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக).

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. இன் விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிதிக்காக 3-1-87 தொடக்கம் 3-2-87 வரை புத்தக விற்பனை வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடாத்தப்படும். A/L இலிருந்து நேசரி வகுப்பு வரைக்கும் தேவையான பாடப்புத்தகங்கள், கொப்பி வகைகள் மற்றும் உபகரணங்களும், நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**தேவை**

இயந்திரஇயக்குநர்கள் தேவை ஹைடில்பேர்க் (HEIDELBERG) அச்சு இயந்திரத்தில் கடமையாற்றிய அனுபவமுள்ளவராக இருக்க வேண்டு, விளம்பர எண்: 43ம் மே/பா உதயன், யாழ்ப்பாணம்.


தம்பாட்டி, காரைநகர், மண்டைதீவு

# தீவுப்பகுதிபடகுசேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5 தீவுப்பகுதி படகுச் சேவை விஸ்தரிப்புகளுக்காக யாழ் அரச அதிபர் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை நிதியிலிருந்து நிதி ஒதுக்கியுள்ளார்.

மாவட்ட அபிவிருத்திச்சபை பிரதம கணக்காளர் திரு. கே எம். ராஜேந்திரன் இதனைத் தெரிவித்தார்.

தம்பாட்டி, காரைநகர், மண்டைதீவு இறங்கு துறைகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி திணைக்கள ஊர்காவற்றுறைத் தொகுதிக்கான 10 லட்சத்து 17 ஆயிரம் ரூபா மாவட்ட அபிவிருத்திச் சபை நிதி ஒதுக்கீட்டுக்குள் இப்பணம் அடங்கும்.

மிகுதிப் பணத்தில் தொகுதிக்கான மின்சார, வீதி விஸ்தரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

## இளைஞர் கழகம் மூலமாக புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், ஜன.5 வதிரி தமிழ் மன்ற இளைஞர் கழகம் தேவரையாளி இந்துக்கல்லூரியில் ஆறும் ஆண்டு வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவருக்கு புலமைப் பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது.

இப்பரிசுகளைப் பெறும் மாணவர்கள் இக்கல்லூரியில் தொடர்ந்து கல்வி பயிலுதல் வேண்டும்.

1987 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசிலை அமரர் கு. சிவராஜசிங்கம் நினைவாக அவரின் புதல்வி திருமதி சிவதேவி வரதராஜன் வழங்க முன்வந்திருக்கிறார். (அ-எ)

## பாசிச சக்திகளின் பயங்கரவாதத்துக்கு பலியானவர் தயா பதிரான

### நவ சமசமாஜக்கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 5 பாஸிச சக்திகளின் பயங்கரவாதத்துக்குப் பலியானவர் கொழும்புப் பல்கலைக் கழக மாணவன் தயா பதிரான.

இப்படி நவ சமசமாஜக் கட்சி பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவித்து உள்ளது.

மாணவன் பதிரானவைக் கொல்வதன் மூலம் இனவிரோத எதிர்ப்புச் சக்திகளை முறியடிக்கலாம் என்று இப்பாசிஸ சக்திகள் நினைத்தால் அது தோல்வியில்தான் முடியும்.

ஜே வி. பி. சக்திகள் தலைமறைவாக இருந்து இப்பயங்கரவாதச் செயல்களை புரிவதன் காரணம், எமது இனவிரோத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியாமற் போனமைதான்.

இப்படியான கோழைத்தனமான செயல்களினால் இடதுசாரி, தொழிலாளர் வர்க்கத்தின் இலட்சியப் பாதையைத் தடைசெய்ய முடியாது.

இச்சவாலை எதிர்த்து மும்முரமாக போராட இடதுசாரிக் கட்சிகள் முன்வர வேண்டும்.

இப்படி நவ சமசமாஜக் கட்சியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

முஸ்லிம் லீக் நிந்தவூர் பற்று சம்மேளனம்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணையும்

அம்பாறை: ஜன. 5 அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் நிந்தவூர் பற்று சம்மேளனம் அப்படியே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் காட்சியுடன் இணைய உள்ளது.

இம்மாதம் பத்தாம் திகதி நிந்தவூரில் நடைபெற உள்ள சம்மேளனக் கூட்டத்தில் இது சம்பந்தமாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று தெரிய வருகின்றது.

இச் சம்மேளனத்தில் சுமார் 1,500 உறுப்பினர்களைக் கொண்ட 13 முஸ்லிம் லீக்கிளைகள் அங்கம் வகிக்கின்றன.

சம்மேளனத்தின் தலைவர் ஜனாப். ஏ. எம். அலியார்.

இதனிடையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஒரு நாள் பிரசாரக் கூட்டங்கள் இம்மாதம் 17 ஆம் திகதி கல்முனை, இறக்காமம், வருத்தப் பஞ்சேனை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன. ((இ-எ-14)

## அச்சுவேலியில் தொழில்பயிலுநர் திட்டம்

அச்சுவேலி, ஜன. 5 தேசிய தொழிற் பயிற்சிச் சபையின் "தொழில் பயிலுநர்" திட்டத்தின் கீழ் அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பயிற்சி பெற விருப்பம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைத் திரட்டி வருகின்றது.

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. தி. கமலநாதன் பயிலுநர் விண்ணப்பம் தொடர்பான அறிவித்தல்களை சங்கத்தின் கிளைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

18—22 வயதுக்கும் இடைப்பட்ட சிறந்த கல்வித் தகைமை உள்ளவர்களுக்கு பயிற்சித் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-11)

## மன்னாரில் எரிபொருள் தாராளம்

யாழ்ப்பாணம், ஜன.5 மன்னார் மாவட்டத்தில் பெற்றோல் விநியோகம் தாராளமாக நடைபெறுகிறது.

மன்னார் மாவட்டத்திற்கு எரிபொருள் பங்கீட்டு முறையில் விநியோகிக்கும் திட்டம் கொண்டு வரப்பட்ட போதிலும் அங்குள்ள எரிபொருள் விற்பனை முகவர்கள் தாராளமாக எரிபொருளை விநியோகம் செய்கிறார்கள். (உ-10)


**விளையாட்டரங்கு**


## டயமண்ட்ஸ் கழக உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன 5 வதிரி டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி வட மாகாண ரீதியில் ஏழு பேர் கொண்ட பொன் விழா உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம் மாதம் நடைபெறவுள்ளது.

வதிரி தமிழ் மன்றம், வதிரி டயமண்ட் விளையாட்டுக் கழகம், வட்டுவத்தை சனசமூக நிலையம் ஆகியன இச் சுற்றுப் போட்டியை நடத்தத் தீர்மானித்துள்ளன (இ-10)

# சிறுநீரக நோய்; நான்கு பிள்ளைகளின் தாயார் உதவி கோருகிறார்

யாழ்ப்பாணம், ஜன.5 சிறுநீரக நோய் காரணமாக ஆபத்தான நிலையில் நான்குபிள்ளைகளின் தாய் ஒருவர் அவஸ்தைப்படுகிறார்.

வேலூர் மருத்துவ மனைக்குச் சென்று மாற்றுச் சிறுநீரகம் ஒன்றைப் பொருத்திக்கொண்டால் தான் அவர் உயிர்தப்ப முடியும் என்று வைத்திய நிபுணர்கள் கூறிவிட்டனர்.

பெண்ணின் பெயர் திருமதி ந. அகிலாண்டேஸ்வரி, (வயது 31)

திருகோணமலை சிவன் வீதி, 65ஆம் இலக்க இல்லத்தில் அவர்வசித்து வருகின்றார்.

வேலூர் சென்று சிகிச்சைபெற இரண்டு இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. இத்தொகையில் சிறு பகுதியைக்கூட திரட்டமுடியாத நிலையில் பெண்ணின் கணவர் இருக்கிறார்.

தமது மனைவியின் உயிரைக் காப்பாற்ற கருணை உள்ளம் கொண்டோரின் உதவியை நாடி இருக்கிறார் அவரது கணவன். இந்தத் தகவலை திருகோணமலைமாவட்ட இந்து இளைஞர் பேரவை தெரிவித்தது. (இஎ)

## ஏப்ரலில் உள்ளூராட்சித் தேர்தல்கள்

கொழும்பு, ஜன. 5 பிரதேச, மாநகர, நகரசபைத் தேர்தல்களை ஏப்ரல் மாதத்தில் ஒரே நாளில் நடத்த அரசு தீர்மானித்துள்ளது.

இத்தேர்தல்களில் வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிக்கவும் வசதி செய்து கொடுக்கப்படும் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ-14)

## மக்கள் முகம்

### சங்கானை பொது நூலக ஆலோசனைச் சபை

யாழ்ப்பாணம், ஜன. 5 சங்கானை பட்டினசபை பொதுநூல்நிலைய ஆலோசனைச்சபை உறுப்பினர்கள் பின்வருமாறு:

பேராசிரியர் கா. சதாசிவம்பிள்ளை, (முன்னாள் விவசாய இலாகா பிரதிப் பணிப்பாளர்) திருமதி சுமித்திரா தவராஜா, (சங்கானை கிராமிய வங்கி முகாமையாளர்), முன்னாள் கல்லூரி அதிபர் திரு. பொ. சிவகுரு, பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ஜீ. சிதம்பரநாதன், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் திரு. கா. சந்திரபாலன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ. விஜயநாதன், மாணவப் பிரதிநிதி செல்வன் ந. தேவதாஸ், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ந பரமானந்தம், பிரதம நூலகர் திரு. செ. யோ. செல்வராஜா (இ)

### ஐக்கிய நாணய சங்கம்

வல்வெட்டித்துறை ஜன. 5 கொற்றுவத்தை அல்வாய் பிரிவைச் சேர்ந்த பூமகள் சனசமூக நிலைய ஐக்கிய நாணய சங்க புதிய உத்தியோகத்தர் தெரிவு அண்மையில் நடைபெற்றது

உத்தியோகத்தர்கள் வருமாறு:

தலைவர் திரு. செ. பராசசிங்கம், உபதலைவர்: திரு. மா. கனகசபை, செயலாளர்: திரு. சி. ரவிச்சந்திரன், உபசெயலாளர்: திரு. இ திருத் தணிகாசலம், பொருளாளர்; திரு. பொ. சின்னராசு.

உபகுழு உறுப்பினர்கள்; திரு. இ செல்வச்சந்திரன், திரு. அ. அருளானந்தசோதி, திரு. மா. பரஞ்சோதி, திரு. கு சின்னத்தம்பி. திரு. சி. யோகேந்திரன் திரு க. பாலகிருஷ்ணின் (இ-10)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## தொண்டமாறு மாணவர் உடுப்பிட்டியில் கல்வி தொடர்வர்

வல்வெட்டித்துறை, ஜன 5 தொண்டமாறு மகா வித்தியாலய மாணவர்கள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர வசதி செய்யப்பட்டுள்ளது.

ஆயுதப் படையினரின் ஆக்கிரமிப்புக் காரணமாக தொண்டமாறு மக்களில் பெரும்பாலானவர்கள் உடுப்பிட்டிப் பகுதியைச் சுற்றியே தற்போது வசித்துவருகின்றனர்.

இவர்களின் கல்வி பாதிக்கப்படாத முறையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தற்காலிகமாக முதலாம் தவணையில் இருந்து இவர்கள் கல்வியைத் தொடர வல்வைப் பிரசைகள் குழு ஏற்பாடு செய்துள்ளது.

மேலும் தொண்டமாறு அகதிகளில் மிகவும் கஷ்ட நிலையில் உள்ள மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடைகளும் பாடசாலை உபகரணங்களும் வழங்க யாழ் அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் சம்மதம் தெரிவித்துள்ளார் என்று வல்வை பிரசைகள் குழுப் பேச்சாளர் ஒருவர் உதயனிடம் தெரிவித்தார். (இ-160)

### பெற்றோர் கோரிக்கை

மண்டைதீவு ஜன. 5 மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிவரும் எந்த ஆசிரியரையும் இடமாற்றம் செய்யாதீர்கள்.

இவ்வாறு கல்விப் பணிப்பாளரை பெற்றோர் கேட்டுள்ளனர். (இ-88)

## வீடமைப்புக்கு குடாநாட்டிற்கு 52 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன.5 1987 ஆம் ஆண்டு வீடமைப்பு ஆண்டாக அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து 52 லட்சம் ரூபா யாழ் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் புதிதாக வீடு கட்டுவோருக்கு கடன் வசதிகள் வழங்கப்படும்.

ஏற்கனவே வீட்டுக் கடன் பெற்றவர்களிடம் இருந்து மீளப் பெறப்படும் பணத்தொகையும் புதியவர்களுக்கு வீட்டுக் கடனாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எழுச்சிக் கிராமங்களில் வீதிகள் மின்சார வசதிகள் என்பனவும் இவ்வருடத்தில் சீராக செய்து கொடுக்கப்படும்.

இத் தகவல்களை யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார். (இ-10)

## இளவாலையில் யுவதிகள் மன்ற கண்காட்சி

இளவாலை, ஜன.5 இளவாலை புனித அன்னம்மாள் கோயில் யுவதிகள் மன்றம் ஆறுமாத கால பன்னவேலை பயிற்சியின் பின் தனது கன்னிப்படைப்புகளைச் சென் ஹென்றீஸ் கல்லூரி வண்டபத்தில் கண்காட்சிக்கு வைத்தது.

இளவாலை கன்னியர் மடமகாவித்தியாலய அதிபர் அருட்செல்வி விக்ரறின் பேசுகையில்—பழைய மாணவிகளின் சுயமுயற்சியும் முற்போக்கான பயிற்சியும் இப் பகுதிக்குப் பெருமளவு உதவ வேண்டும்.

சுயதேவையை நமக்கு நாமே பூர்த்தி செய்ய முன்வருவதற்கு இத்தகைய கண்காட்சிகள் வழிவகுப்பது பாராட்டுக்குரியது என்றார்.

கண்காட்சியைப் பயிற்சி ஆசிரியை திருமதி சு... பணம்பொருள் பயிற்சி மாணவர்களின் சான்றிதழ்களை அருட்திரு ரீ. பற்றிக் அடிகள் வழங்கினார். (இ-48)

### மயிலிட்டிக்கு டாக்டர் அரியரத்தினம்

சுன்னாகம் ஜன. 5 மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்கு புதிய வைத்திய அத்தியட்சகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்திய கலாநிதி திருமதி பிரேமினி அரியரத்தினம் வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பில் அரசினர் அஸ்பத்திரியில் மார்பு நோய் சிகிச்சைக்கு விசேஷ வைத்திய அதிகாரியாக கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது. (இ-27)

## திருமலை அகதிகளுக்கு புனர்வாழ்வுக் கழகம் நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜன. 5 திருகோணமலை மாவட்ட அகதிகளின் புனர்வாழ்வு வேலைகளை மேற்கொள்ள அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் 3 லட்சம் ரூபா நிதி உதவியை வழங்க முன்வந்துள்ளது.

இத் தொகைக்கான காசோலையை புனர்வாழ்வுக் கழகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையிடம் ஒப்படைத்தது.

இது சம்பந்தமான கலந்துரையாடலில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, செயலாளர் திரு. க. சிவகுரியர். திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சார்பில் தலைவர் திரு. கு. கோணமலை. பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம், புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு வே. ஜெயராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அளித்த நிதி மூலம் திருமலை மாவட்ட அகதிகளுக்கு பின்வரும் புனர்வாழ்வுக் கருமங்களுக்கு உதவி வழங்கப்படும்.

1. வன்செயலினால் இறந்தவர்களை நம்பியிருந்தவர்களுக்கு உடனடி நிவாரண நிதியாக ஆயிரம் ரூபா வழங்குதல்.

2. மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்களுக்கான உதவிப்பணம் வழங்கல்.

3. குழந்தைகளுக்கான பால் மா உணவுகள் வழங்கல்.

4. பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவருக்கு சீருடைகள் அப்பியாசப் புத்தகங்கள் வழங்கல்.

5. வெலிக்கடை, பூசா தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்படும் இளைஞர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைத்தல் சம்பந்தமாக கொழும்பில் இயங்கும் பெண்களுக்கான சமாதான அணியினருடன் சேர்ந்து உதவிகளை மேற்கொள்ள பண உதவி அளித்தல்.

6. பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவிகள் செய்வதற்காக உதவி வழங்கல். (இ-எ)


வெளிநாடு செல்லும் பிரயாணிகளின் முக்கிய கவனத்திற்கு

உங்கள் பிரயாணம் எங்களால் நிச்சயிக்கப் படுகின்றதா என்பதை நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

✳ கனடா ✳ பிரான்ஸ்
✳ ஜெர்மனி ✳ நோர்வே

ஆகிய நாடுகளுக்கான உங்கள் பிரயாணம்
எமது காரியாலயத்தில் மட்டுமே
பதிவு செய்யப்படுகின்றது.

தவிப்பட்ட நபரோ அன்றி வேறு நிறுவன முகவர்களோ எம்மால் நியமிக்கப்படவில்லை.

நீங்கள் எம்முடன் நேரிலேயே தொடர்புகொள்ளுங்கள்.
உங்கள் வெளிநாட்டுப் பயணத்தை நிறைவேற்றக் காத்திருக்கிறோம்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.

நோர்வே செல்பவர்களுக்கு இலவச பொண்ட் செய்து தரப்படும்.

எமக்கு வேறு கிளைகள் கிடையாது!

விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.
யாழ் நகரில் O/L வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஒரே நிறுவனம்
10 வது வருடசேவை
O/L, Day Classes
காலை 8.30
9, 8, 7, 6 வகுப்புக்களும் ஆரம்பமாகின்றது. மாலை 2.30
ஆரம்பம்: ஜனவரி 5

விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரோட்
யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
கலை, வர்த்தக மீட்டல் வகுப்புக்கள்
DAY CLASSES
புதிய பிரிவு 2
ஆரம்பம்: ஜனவரி 5
காலை 8-00 மணி

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

அன்புக்கு தோல்வி இடையாது. அன்புள்ள இருதயத்தை எவராலும் எதிர்க்க முடியாது. அன்புள்ளவர்கள் யமனுக்கு அஞ்சமாட்டார்கள்.

—சுவாமி விவேகானந்தர்

உதயன்

இல,15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 05-01-1987 த. பெ இல 23

## எதையும் தாங்கும் இதயம் செய்வீர்!

அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடையால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது கையிருப்பில் உள்ள எரிபொருள் தீர்ந்து போனதும் நிலைமை மிக மோசமாகும். பல கஷ்டங்கள் உருவாகும்.

எரிபொருள் விநியோகம் கட்டுப்படுத்தப்பட்ட காலங்களிலேயே இப்பகுதியில் மக்கள் அருவருக்கத்தக்க அனுபவங்களைக் கண்டார்கள். பதுக்கல், விலையேற்றம், கள்ளச்சந்தை, செல்வாக்கு உள்ளவர்கள் பாதிக்கப்படாமை ஆகிய சமூக விரோதங்கள் மலிந்து காணப்பட்டன. அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சாதாரண ஏழை மக்கள்தான். எரிபொருளே இனிக் கிடையாது. ஆகையால் அவை குறித்துப் பிரஸ்தாபிக்க இப்போது அவசியம் எழவில்லை.

அரசாங்கத்தின் தடை தொடருமானால் நிலைமையை எவ்வாறு சமாளிப்பது என்பதிலேயே நாம் இப்போது கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

கையிருப்பில் உள்ள எரிபொருளை உடனடியாகத் தீர்ந்து போகாமல் பார்த்துக்கொள்வது முதற் தேவை. அதனை அத்தியாவசிய தேவைகளுக்கு என ஒதுக்குவது முக்கியமானது. அத்தியாவசிய தேவைகள் எவை என்று இனங்காணப்படுவதும் அவசியம்.

உயிருக்குப் போராடும் நோயாளியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதும், சாமான் வாங்கக் காரில் கடைக்குச் செல்வதும் வெவ்வேறானவை.

கண்டபடி வாகனங்கள் ஓடுவதை தவிர்ப்பது கட்டாயம். வான் சேவைகளை மிகக் குறைந்த அளவுக்கு கட்டுப்படுத்திக் கொள்ளுதலும் அவசியம்.

தனியார் பாவிப்பு வாகனங்களைச் சில காலத்துக்குத் தொடக்கூடாது. சைக்கிள்கள், மாட்டு வண்டிகளை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும்.

குறுகிய தூரங்களை நடந்து செல்லப் பழகுதல் அவசியம். இரவில் விளக்கு எரிப்பதற்கு இலுப்பெண்ணெய் போன்ற சுதேச எரிபொருள்களை மீண்டும் பாவனைக்குக் கொண்டு வரவேண்டும்.

விவசாயத்தைப் பொறுத்தவரை மீண்டும் துலாவையும் பட்டையையும் நாடவேண்டும்.

மொத்தத்தில் எரிபொருள் இல்லாததால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை நின்று பிடிக்கக்கூடிய — தாக்குப் பிடிக்கக்கூடிய மனோதிடமே இப்போது எங்களுக்குத் தேவை.

எரிபொருளுக்கு எமது வாழ்க்கையை நாம் அடகு வைத்திருந்தது உண்மை அது இல்லையேல் வாழ்க்கை இல்லை என்னுமளவுக்கு நாம் அதற்கு அடிமைப்பட்டதும் உண்மை. அதுபோலவே மின்சாரத்தையும் நாம் எமது வாழ்க்கையை ஆக்கிரமிக்க வழி செய்ததும் நிசமானது

அவை இல்லாவிட்டால் உணவு உற்பத்தி, போக்குவரத்து, வர்த்தகம், கல்வி யாவுமே பாதிக்கப்படக் கூடிய அளவுக்கு நாமே எம்மைச் சோம்பேறிகள் ஆக்கிக் கொண்டோம். கைக்கொண்ட பழக்கத்தை மாற்றிக் கொள்வது கஷ்டம் தான். ஆனால் மனவிருப்பமும், மன உறுதியும் இருந்தால் நிலைமையைத் தாக்குப் பிடிக்கலாம்.

அதற்கு எம்மைத் தயாராக்கிக் கொள்வது எங்களைப் பொறுத்ததே. உரிமைகளைப் பெறுவதற்கு, சுதந்திரத்தைப் பெறுவதற்கு கஷ்டங்களை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். தற்போது அனுபவிக்கும் சுகபோகங்களைத் துறக்காமல் சுதந்திரம் வராது இந்த உணர்வு தமிழன் ஒவ்வொருவனுக்கும் தேவை.

எரிபொருள் தடை, மின்சாரத் தடை என்றதும் உணர்ச்சி வசப்படுவதற்குப் பதில், சுதந்தர உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் எதையும் தாங்கும் இதயம் உள்ளவர்களாக மாற வேண்டும். மனோதிடமும் உறுதியும் உள்ளவர்களாக உயர வேண்டும்.

கஷ்டத்தை அனுபவிக்கும் தைரியம் எமக்கு உண்டெனக் கண்டால் அரசாங்கம் ஆடிப் போகாதா?

யாழ்ப்பாண மக்கள் முயற்சி உள்ளவர்கள், கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் என்று பட்டம் சேட்டு என்ன பயன்? இந்த இருள் சூழ்ந்த நேரத்திலாவது பட்டத்துக்கு ஏற்றவாறு பழகத் தெரிய வேண்டாமா?

யாழ்ப்பாண மக்கள் தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம். திருந்துவீர்களா? அல்லது வெளிநாடு போய் உல்லாசமாய் வாழ்வோம் என்று நினைப்பீர்களா? முதலாவதைச் செய்யின் நீங்கள் தேச பக்தர்கள். இரண்டாவதை விரும்பின் தேசத்துரோகிகள்!

## ஜப்பானிய கருத்தரங்கில் இலங்கைத் தமிழர் இருவர்

யாழ்ப்பாணம், ஜன 5 கிராம விவசாய அபிவிருத்திப் பணியாளர்களுக்காக ஜப்பானில் உள்ள ஆசிய கிராமிய நிறுவனம் நடத்தும் 9 மாதக் கருத்தரங்கில் இரண்டு இலங்கைத் தமிழர் பங்கு பற்றுகின்றனர்.

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளையைச் சேர்ந்த கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. கே. ஸ்ரீபதி, மட்டக்

(4-ம் பக்கம் பார்க்க)

### இந்தியாவுக்கு ரஷ்யாவின்

# நவீன மிக் - 29 விமானங்கள்

## விநியோக வேலைகள் ஆரம்பம்

புதுடில்லி, ஜன 4

நவீன மிக் – 29 ரக யுத்த விமானங்களை இந்தியாவுக்கு வழங்கும் வேலைகளை ரஷ்யா ஆரம்பித்து விட்டது. இவ்விமானங்களின் பகுதிகள் பம்பாய்த் துறைமுகத்தில் தற்சமயம் இறக்கப்பட்டு வருகின்றன.

— சோவியத் நிபுணர்கள் பம்பாயில் விமானங்களை முழுமையாக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்னும் இரண்டு மாதங்களில் இந்திய விமானப்படை மிக்- 29 விமானங்களை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தத் தொடங்கி விடும்.

ரஷ்யாவினால் 40 மிக் 29 யுத்தவிமானங்கள் இந்தியாவுக்கு விற்கப்படுகின்றன.

மணித்தியாலத்துக்கு 3, 000 மைல் வேகத்தில் பறக்கும் இந்த மிக் 29 விமானங்களில் நவீன ராடர் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ரஷ்யாவில் உள்ள அதி சக்தி வாய்ந்த நவீன சண்டை விமானமாக மிக் 29 கருதப்படுகிறது.

ரஷ்யா தனது 'வார்ஸோ' அமைப்பு நேச நாடுகளுக்குத்தான் மிக் 29 விமானங்களைக் கொடுத்து வந்தது.

'வார்ஸோ' அமைப்பு நாடுகளை விடுத்து வேறொரு நாடு ஒன்றுக்கு மிக் 29 விமானங்களை ரஷ்யா விற்க முன்வந்தது இதுவே முதல் தடைவ.

### வெளி உலகில்

## சிலியில் ராணுவ சட்டம் நீக்கம்

சந்தியாகோ, ஜன, 4

சிலிநாட்டில் இராணுவச் சட்டம் புத்தாண்டில் நீக்கப்பட்டது.

இன்னும்தொண்ணூறு தினங்களில் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவர் என்று சிலி ஜனாதிபதி அகஸ்டோ பினோசெற் அறிவித்தார்.

புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி இத்தகவல்களை வெளியிட்டார். (இ-எ)

## ● எய்ட்ஸ் ஒழிப்புக்கு ரூ 80 கோடி

லண்டன், ஜன. 4

எய்ட்ஸ் நோய்த் தடுப்புப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரிட்டன், இலங்கை நாணய மதிப்பின்படி 80 கோடி ரூபாவை இந்த ஆண்டில் செலவழிக்க இருக்கிறது.

ஒளிபரப்பு, ஒலிபரப்பு, பொது சன தொடர்பு சாதனங்கள் மூலம் இப்பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (இ-எ)

## இனப்பிரச்சினை பேச்சு ஸ்தம்பிதம் என்கிறது இந்து நாளிதழ்

புதுடில்லி, ஜன 4

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் ஸ்தம்பித நிலையை அடைந்து உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் இருந்து அம்பாறைத் தொகுதியை பிரிப்பது என்ற நிலையில் இருந்து இலங்கை பின்வாங்கியதைத் தொடர்ந்தே இந்திய மத்தியஸ்தம் ஸ்தம்பித்துள்ளதாக 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது (இ-ஐ-எ)

## சூரியன் - சந்திரன் - பூமி ஒரே வரிசையில் வர புயலும் கொந்தளிப்பும்

வாஷிங்டன், ஜனவரி 4

அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியை புயற்காற்றுடன் பெரிய கடல் அலைகளும் கடும் பனியும் தாக்கின.

இதனால் 6 பேர் இறந்தனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

சூரியன், சந்திரன், பூமி ஆகியன ஒரே வரிசையில் வந்த அரிய நிகழ்ச்சியால் இந்தப் புயற்காற்று ஏற்பட்டது'

1912 ஆம் ஆண்டு முதல் இந்தகைய அதிசய சம்பவம் மூன்று முறை நிகழ்ந்துள்ளது. (ஓ)

## ஆப்கன் அரசு யுத்த நிறுத்தம்

காபூல், ஜன 4

ஆப்கான் அரசாங்கம் தன்னிச்சையாக யுத்த நிறுத்தம் ஒன்றை அனுஷ்டிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

யுத்த நிறுத்தம் ஆறு மாதகாலம் அமுலில் இருக்கும். இம்மாதம் 15ஆம் திகதியில் இருந்து யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வரும்.

ஆளும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி நஜிபுல்லா இதனை அறிவித்தார்.

ஆப்கான் கெரில்லாக்கள் யுத்தநிறுத்த வேண்டுகோளை ஏற்க மறுத்து விட்டனர்.

யுத்த நிறுத்த தீர்மானத்தைச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவு என்று ரஷ்யா பாராட்டியுள்ளது.

ஜெனீவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாக உள்ள ஆப்கான் பேச்சுக்களுக்கு முன்னோடியாக எடுக்கப்பட்டுள்ள பிரசார நடவடிக்கை என்று மாஸ்கோவில் உள்ள மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் கருதுகின்றனர் என்று பி.பி.சி வானொலி அறிவித்தது. (இ எ)

## 800 லிபிய வீரர் பலி?

சாட்,ஜன.4

சாட் யுத்தத்தில் சுமார் 800 லிபியவீரர்கள் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

சாட் அரசு இதனை அறிவித்தது. தனதுபக்கத்தில் 18 வீரர்கள்மட்டுமே உயிரிழந்தனர் என்றும் சாட் அரசாங்கம் தெரிவித்தது (இ-எ)

## ● தனிநாடு கிளர்ச்சியை கைவிட்டனர்

மணிலா, ஜன. 4

பிலிப்பீன்ஸில் தனிநாடு கோரி நடத்தப்பட்ட போராட்டத்தை முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் கைவிட்டு விட்டனர்.

இப்படி பி.பி சி. வானொலி அறிவித்தது.

பிலிப்பீன்ஸ் அரசுக் குழுவுக்கும் முஸ்லிம் கிளர்ச்சியாளர் குழுவுக்கும் இடையே நடந்த பேச்சுகளைத் தொடர்ந்து தனிநாடு கோரிக்கை கைவிடப்பட்டது. (இ-எ)

## லெபனன் கடலில் இஸ்ரவேல் கப்பல்

டெல்அவிவ், ஜன.4

லெபனன் கடல் பிரதேசத்தில் இஸ்ரவேல் கடற்படைக் கப்பல் நிலை கொண்டு உள்ளது என்ற செய்தியை இஸ்ரவேல் அரசாங்கம் அறிவித்தது.

வெளிநாட்டு அமைச்சர் ஷிமொன் பெரெஸ் இத்தகவலை வெளியிட்டார். (இ-எ)

## குடியரசு தினத்தை பகிஷ்கரிக்க முஸ்லிம் தீவிரவாதிகள் கோரிக்கை

புதுடில்லி, ஜனவரி 4

இந்திய குடியரசு தினக் கொண்டாட்டத்தை பகிஷ்கரிக்க வேண்டும்,

இவ்வாறு முஸ்லிம் தீவிரவாதிகள் இந்திய முஸ்லிம்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடஇந்தியாவில் உள்ள அயோத்தியில் சுமார் நானூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த பள்ளிவாசல் ஒன்றையிட்டு நிலவும் சர்ச்சையே முஸ்லிம் தீவிரவாதிகளின் இந்த கோரிக்கைக்கு காரணமாகும்.

இந்தப் பள்ளிவாசலை ஓர் இந்து ஆலயமாக பிரகடனம் செய்ய வேண்டும் என கடந்த பெப்ரவரிமாதம் உள்ளூர் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியிருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தியாவில் வாழும் சுமார் 10 கோடி முஸ்லிம் மக்களும் இம்மாதம் 26 ஆம் திகதி குடியரசுதினக் கொண்டாட்டங்களை பகிஷ்கரிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஓ)

# வடபகுதியில் மிளகாய் உற்பத்தி பெரு வீழ்ச்சி

மானிப்பாய், ஜன. 5

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1982ஆம்ஆண்டு 9000, ஏக்கர் நிலத்தில் மிளகாய் உற்பத்தி செய்கை பண்ணப்பட்டது. மாவட்ட அபிவிருத்திச்சபைத் திட்டத்தின்படி இவ்விஸ்தீரணம் மேலும் 4,000 ஏக்கராக அடுத்த 5 ஆண்டுகளில் படிப்படியாக அதிகரிக்கப்படவேண்டும். எனினும் 1986இல் 6,000 ஏக்கரில் மட்டுமே மிளகாய் செய்கைபண்ணப்பட்டது

யாழ்ப்பாணக் கல்லூரியின் மருதனமடம் விவசாய நிலையகூடத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட விவசாய ஆசிரியர் கருத்தரங்கில் உரையாற்றிய அந்நிலைய அதிபர் திரு. சி. ஜெயரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

மூன்று நாட்களாக நடைபெற்ற இக்கருத்தரங்கின் முதல்நாள் நிகழ்ச்சியில் யாழ்ப்பாணமாவட்டத்தில் விவசாயம் என்றவிடயம் பற்றி அவர் கருத்துரை வழங்கினார்.

விவசாயபாட வட்டாரக்கல்வி அதிகாரி செல்வி பெரியதம்பி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. சி. ஜெயரத்தினம் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாணக் குடாநாடு நில அமைப்பில் சமாந்தரமானது.

தெல்லிப்பழை, அல்வாய் ஆகிய இடங்கள் தான் சற்று (17 அடி வரை) உயரம்கூடியவை.

இங்கு சிறந்த விவசாய முறைக்கு ஏதுவாகஇருப்பவை கல்சியம் சேர்ந்த செம்மஞ்சள் நிற மண்ணும், இணற்று நீருமே.

ஏனைய மாவட்டங்களில் (முல்லைத்தீவு, வவுனியா) ஓரளவு நல்ல மண் வகை காணப்படினும் நீர்வசதி அங்கு இல்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 80 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடிபண்ணப்படுகின்றது. முழுக்க முழுக்க மழையையே நம்பி செய்கை பண்ணப்படும் நெல் காலத்துக்கேற்ப மழைவீழ்ச்சி கிடைத்தால் மட்டுமே ஏக்கருக்கு 60புசல் அறுவடை செய்யலாம்.

பல்லவராயன்கட்டில் மாரிகாலத்தில் பெய்யும் மழையைக்கொண்டு புல் [illegible] பண்ணை அமைக்க முடியும்.

இப்படி அவர்கூறினார். (இ-90)

## கல்முனை பொலீஸ் தாக்குதலுக்கு அம்பாறை அபி.சபை கண்டனம்

அம்பாறை, ஜ.5

சென்றமாதம் 13-ஆம் திகதி கல்முனையில் முஸ்லிம் மக்கள்மீது பொலீஸார் நடத்திய தாக்குதலைக் கண்டித்தும், அது குறித்து சுதந்திர நீதி விசாரணை நடத்த வேண்டி அரசாங்கத்தைக் கோரியும் அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது:

சபையின் கூட்டம் கடந்த புதன்கிழமை காலை தலைவர் ஜனாப் எம். எச். எம். ஜெளபர் தலைமையில் நடைபெற்றது.

பொத்துவில் 2-ஆவது எம். பி. திருமதி ரங்கநாயகி பத்மநாதன் உட்பட சகல உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

கல்முனைப் பொலீஸ் தாக்குதல் குறித்த கண்டனப் பிரேரணையை கல்முனை எம். பி. ஜனாப் ஏ. ஆர் எம். மன்சூர் முன்மொழிந்தார்.

அப்போது [illegible] சொன்னதாவது;

போராளிகளும் பொலீஸாரும்மோதிக்கொண்ட பின்னர் பொலீஸார் மேலதிகமாக வந்து முஸ்லிம்களைத் தாக்கினர் சில முஸ்லிம்கள் உயிரிழந்தனர்.

முஸ்லிம்களின் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன.

இச்சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்குநிவாரணம் வழங்கப்பட வேண்டும். நீதி விசாரணை நடத்தி சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப் படவேண்டும்.

முஸ்லிம்கள் சமாதான விரும்பிகள் நாம் பதவி மோகம் பிடித்தவர்கள் அல்லர். கல்முனைச் சம்பவத்தை வைத்து அழிவுப் பாதையில் முஸ்லிம் இனத்தை கொண்டு போகும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். குட்டையைக் குழப்ப முயலும் இவர்கள் குறித்து நாம் அவதானமாக இருக்கவேண்டும்— இப்படி ஜனாப். மன்சூர் தெரிவித்தார்.

[illegible] திரு. டி. ஐ. தயாரத்தின[illegible] தீர்மானத்தை ஆதரித்தனர். (உ-எ-14)



**பொய்யாமொழி**

**குறள்:**

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு.

**பொருள்:**

மெய்ப்பொருள் அல்லாதவைகளை மெய்ப்பொருள் என்று தவறாக உணர்கின்ற மயக்க உணர்வால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும்.

## செய்திக்கொத்து

### பயிற்சிநெறி பூர்த்தி

பலாலி ஜன. 5

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்படும் பெண்களுக்கான உடையமைத்தல் — மனையியல் பயிற்சி நெறிகள் பூர்த்தியடைந்துள்ளன (இ-119)

### திடீர் கணக்கு பரிசோதகர்கள்

வேலணை ஜன. 5

தெங்கு பனம்பொருள் சங்கத்தின் நிர்வாக சீர்கேட்டை கண்காணிப்பதற்காக திடீர் கணக்குப் பரிசோதகர்கள் நியமிக்கப்பட இருக்கின்றார்கள். (இ-167)

### யானையிடமிருந்து தப்பினார்

முள்ளியவளை, ஜன.5

முள்ளியவளையிலிருந்து ஒட்டுசுட்டானை நோக்கி சைக்கிளில் சென்ற நடுத்தர வயதுடைய நபர் ஒருவர் புளியங்குளத்துக் கருகில் யானையினால் வழி மறிக்கப்பட்டு தெய்வாதீனமாகத் தப்பினார்.

சிறு காயங்களுடனும் சேதமடைந்த சைக்கிளுடனும் இவர் ஒட்டுசுட்டானை அடைந்ததாகவும் தெரியவருகிறது. (இ-93)

### காட்டுப்புலத்தில் மரம்நாட்டு விழா

கரவெட்டி, ஜன 5

நாளை ஆறும் திகதி காட்டுப்புலம் கிராமத்தில் கட்டைவேலி—நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில் மரம் நடும் விழா நடைபெறும்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை கட்டைவேலி—நெல்லியடி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வார்கள். (இ-70)

### சாதனை ஆண்டு

பருத்தித்துறை, ஜன. 5

1987 ஆம் ஆண்டை சாதனை ஆண்டாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என புலோலி மக்களினால் அண்மையில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்கட்டுள்ளது

அரசு 1987 ஆம் ஆண்டை சமாதான ஆண்டாகப் பிரகடனப்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் மாயச் சதியில் ஈடுபட்டுள்ளது என்றும் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-118)

### ஜீ. சீ. ஈ. சான்றிதழ்கள்

பருத்தித்துறை. ஜன. 5

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரியில் 1980 ஆம் 1981ஆம் ஆண்டு ஜீ. சி. ஈ சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்தவர் களுக்கான சான்றிதழ்கள் இடைத்துள்ளன.

இப்பரீட்சைகளில் தோற்றிய மாணவிகள் உடனடியாகக் கல்லூரிக்கு வந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் திருமதி. வீ. சந்திரசேகரம் அறிவித்துள்ளார். (இ-18)

### முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள்

அம்பாறை, ஜன. 5

தேசிய அரசியற் கட்சியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிளைகளைத் திறப்பதில் அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமங்கள் தோறும் பெரும் ஆர்வம் காட்டப்பட்டு வருகின்றது. (இ - 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரு டியூசன் சென்றர்
கோண்டாவில்
O/L பிரிவு 4 தை 5இல் ஆரம்பம்
10, 9, 8, 7, 6 ஆண்டுக்கான பிரிவு 3 தை 10இல் ஆரம்பம்.
* கடந்த கால பெறுபேறுகள் நிகழ் ஆண்டுக்குச் சான்ருகும்.

# உதயன்

05 01 1987 திங்கட்கிழமை

Niru Tuition Centre
KONDAVIL
A/L 87 Paper Classes
இரசாயனம் : திரு. செல்வா
ஆரம்பம்: 7-1-87 புதன்: 3 00-4 00
பௌதிகம் : திரு. சௌந்தி
செவ்., வியா: 6 00-7.00 காலை
தாவரவியல், விலங்கியல்: தை 10இல் ஆரம்பம்

# குரங்கு அப்பம் பிட்டுப்பிரித்த நிலையில் இந்திய மத்தியஸ்தம்

## விவாத அரங்கில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 5 குரங்கு அப்பம் பிட்டுப் பிரித்தநிலையில் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் மத்தியஸ்தம் உள்ளது இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது

யாழ் பட்டப் படிப்புக்கள் கல்லூரியின் 10 ஆவது ஆண்டு விழாவையொட்டி "இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாடு "சரியா? பிழையா? எனும் பொருள்பற்றி விவாதம் நடைபெற்றது

திரு. இராதாகிருஷ்ணன் இந்தியாவின் நிலைப்பாடு பிழை என வாதாடுகையிலேயே இவ்வாறு கூறினார் அவர் மேலும் பேசுகையில் இந்தியாவின் வடக்கே சீன, பாகிஸ்தான் எல்லைகளில் பெரும் தலையிடியை இந்தியா எதிர்கொண்டுள்ளது

அதேபோல் தெற்கே இலங்கையாலும் தலையிடி ஏற்படலாம் என எண்ணுகிறது.

இதனால் போராளிகளை தூண்டிவிட்டு இலங்கை அரசுக்கு தலையிடி கொடுத்து; இலங்கை அரசை தன்னிடம்பணிய வைக்க இந்தியா முயலுகிறது என்றார்.

இந்தியாவின் நிலைப்பாடு சரியானது என வாதிட்ட திரு. க. வாமதேவன் உரையாற்றுகையில் கூறியதாவது;-

இந்தியாவை மத்தியஸ்தம் வகிக்கும் படி நாமே வலிந்து அழைத்தோம்.

உலக நாடுகளில் இலங்கை அரசுக்கெதிராக இந்தியா குரல் கொடுக்கும் போது அதை வரவேற்கும் நாம், எமது பிழைகளை அது சுட்டிக் காட்டும்போது கொதித்தெழுந்த கொடும்பாவி எரிக்கின்றோம்,

இந்தியாவில் இலங்கை அகதிகள் தான் உள்ளனர் என இந்தியா உலக நாடுகளுக்கு கூறுகிறது

எமது இளைஞர்கள் தாம் அங்கே ஆயுதத்துடன் இருப்பதை, அடிக்கடி சில அடாவடித்தன நடவடிக்கைகள் மூலம் காட்டிக்கொண்டு இந்தியாவை உலக நாடுகளுக்கு காட்டிக் கொடுக்கின்றனர்.

செல்வி. எஸ், ஜெகசோதி செல்வி க. ரேணுகா, திரு. ந. குருபரன், திரு த. விஜயசிறி, ஆகியோரும் இவ் விவாத அரங்கில் கலந்து கொண்டனர்.

விவாத அரங்கிற்கு திரு. பொன். பூலோகசிங்கம் நடுவராக கடமையாற்றினர்.

வெளிவாரி மாணவர் ஒன்றிய தலைவர் திரு. க வாமதேவன் தலைமையுரையும், செயலாளர் திரு ந சுகுணன் நன்றியுரையும் வழங்கினர். (இ-5)

## வித்தாரம்

என்ன தம்பி முரளி; எப்பிடி?

என்ன கையில 'கானே'டை வாருய்! ஹொண்டாவுக்கு பெற்ரேல் வாங்கப் போறியோ அல்லது விளக்குக் கொளுத்த மண்ணெண்ணை வாங்கப் போறியோ?

எங்கே வாங்குவாய்? எத்தனை நாளுக்கு வாங்குவாய்? ஆனையிறவுக்கு இஞ்சால அதுகள் துண்டாக வராத நிலை ஏற்பட்டிருக்கு. ஆகையினால் அதுகளைக் கொஞ்ச நாளைக்கு மறந்து மாற்று வழியளைக் கையாள வேண்டியது தான்!

உனக்குத் தெரியுமே, உந்த எரிபொருள் தடை குறித்து கொழும்பில அரசாங்க எதிர்ப்பு வட்டாரங்கள் கூட வாய் திறக்கக் கஷ்டப்படுகினம். அவையை விடு.

ஒருதரோடை நேற்றுக் கதைச்சபோது அவர் இரண்டு பக்கங்களாலையும் விஷயத்தைப் பாக்கிருர் எண்டது தெரிஞ்சிது.

எரிபொருள் தடை ஒரே நாட்டுக்குள் எடுக்கக்கூடாத ஒரு நடவடிக்கை. தன்ரை ஆட்சியில இன்னொரு சிவில் நிர்வாசமா? — எண்ட ஆத்திரத்தில கடைசி நடவடிக்கையாக அதை அரசு எடுத்திருக்குது போல. ஆனால் அதை ஒரு பொருளாதாரத் தடையாக்கி, நிரந்தரமாக்கினால் நிச்சயம் உங்களுக்குத் தனிநாடு தானாக வந்த மாதிரி முடிஞ்சிடும். அதால தான் அவை தற்காலிகம் எண்டு அறிவிச்சிருக்கினம் என்ருர் அவர்.

ஆனால் சொந்தச் சிவில் நிர்வாகத்தைச் செய்யத் திட்டமிட்டபோது இப்படியான நிலைமை உருவாகும் எண்டு நினைச்சு நீங்கள் ஏதாவது மாற்று வழியளோடு தயாராயிருந்திருக்க வேணும் எண்டும் அவர் சொன்னர்.

எங்கடை மக்கள் கஷ்டங்களை அனுபவிக்கப் பழக்கப்பட்ட மக்கள் எண்டு நான் அவரிடம் சொன்னேன். அவர் தொலைபேசியிலேயே வாய்விட்டுச் சிரித்தார். அவர் யாழ்ப்பாணம் வந்து போனவர். எங்கடை 'பீத்தல்' அவருக்குத் தெரியுமோ என்னவோ? அவர் ஒரு வெளிநாட்டுக்காரர்!

எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு முந்தின காலத்தை நினைச்சுப் பாரேன். யாழ்ப்பாணம் ஒரு யுத்த களமாய் இருக்குது எண்டுஇஞ்சைவந்து பாக்கிற யாரும் சொல்லக் கூடியமாதிரியே இருந்தது — இப்பவும் ஒரு யுத்த பூமியில் வாழுற மக்களைப்போலையே எங்கடை ஆக்கள் இருக்கினம்.

வீட்டுக்கு வீடு கார்; இல்லாட்டால் மோட்டச் சைக்கிள், மற்றும் சாதாரண காலம் போல சகல ஆடம்பரங்களும் இருக்கு. கலியாண வீடுகள், கொண்டாட்டங்கள், விழாக்கள், தமாஷாக்கள் எதுக்கு எங்கடை மண்ணில குறைச்சல் இருந்தது. - இருக்குது? வீட்டுக்கு வீடு ஆடம்பரப் பொருள்கள். எல்லாம் வெளிநாட்டுக் காசு வெளிநாட்டுக் காசெண்டா அதை உப்பிடியே சிலவழிக்கிறது?

உந்த ஒடியோ, வீடியோ செற்றுகளால வீடுகளை அலங்கரிக்கிறதுக்குப் பதிலாய், வெளிநாட்டுக்கு போன நாலு பேர் சேர்ந்து முதலைப்போட்டு ஒரு கைத்தொழில், தொடங்கிளுக் கூடாதே?

எங்கடை சனத்துக்கு இன்னும் மூளை வரயில்லைத் தம்பி. இல்லையில்லை நாட்டுப்பற்று வரயில்லை. அவ்வளவு தான்.

கொஞ்சக் கஷ்டம் வந்தாலும் பெரிசு படுத்தி ஆஹா, உஹா போடுறதுக்கு மட்டும் முன்னுக்கு நிக்குதுகள்.

இந்தியாவில சுதந்திரப் போராட்டம் நடக்கயிக்கை அந்தச் சனம் எவ்வளவு கஷ்டங்களை அனுபவிச்சது தெரியுமே அதில நூறில் ஒரு பங்கு தானும் அனுபவிக்க எங்கடை ஆட்கள் தயங்குகினம். எவ்வளவு கவலையான விஷயம்!

பிரயாண ஒழுங்குகள்

நோர்வே ★ கனடா
ஜேர்மனி ★ லண்டன்
சிங்கப்பூர் ★ சவூதிஅரேபியா

ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் உடனடியாகக் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் பிரயாணம் மேற்கொள்வதற்கு நாடுங்கள்.

TRI STAR TRAVELS
No. 6, Model Market,
Jaffna. Telephone: 23831

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 16 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 05 - 01 - 1987.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 16 Second Lane, Power-House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60/N 86 தொலைபேசி. 24805, 22078

# வேல்முருகு தலைமையில் புதியபிரசைகள் குழு

அம்பாறை ஜன 5 கல்முனை, சம்மாந்துறை நிந்தாவூர்த் தொகுதிகளை உள்ளடக்கிய பிரசைகள் குழு ஒன்று நேற்று அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது

இக்குழுவின் தலைவராக கூன்டணிப் பிரமுகர் திரு ஏ கே. வேல்முருகு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்

அங்குரார்ப்பணக் கூட்டம். கல்முனை வை. எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்றது.

நிர்வாகிகள் விவரம் வருமாறு:-போஷகர்கள் வண.லோப்பு, ஆர். எம் செபரத்தினம், எஸ் சோமரத்தின. உபதலைவர்கள்: கோபன் கந்தையா எம்.எம் இஸ்மாயில், டி ஆர்.செனவிரத்தின. செயலாளர்: என் எஸ். இராஜசுந்தரம் உபசெயலாளர்: எஸ். சஜபதி. பொருளாளர் எஸ். கச்சு முகமது.

(இ-எ-14)

## 3ஆவது டெஸ்ட் ஆரம்பம்

புதுடில்லி ஜன 4 இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்ருவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி நேற்று கட்டாக்கில் ஆரம்பமானது

இவ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 3 விக்கட்டுக்கள் இழப்புக்கு 324 ரன்களை எடுத்தது. வெளிச்சம் போதாமையால் ஆட்டம் இடையில் முடிந்தது.

முதாலாவது டெஸ்ட் கான்பூரில் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

இரண்டாவது டெஸ்ட் நாக்பூரில் இந்தியாவுக்கு சாதகமாக முடிவடைந்தது. (ஒ-எ)

## தமிழ்---

(1- ம்பக்கத் தொடர்ச்சி)

டும்

பின்னர் அதை சமர்ப்பிக்கும் போது பெரும்பான்மை இனத்தினரால் தட்டிக் கழிக்க முடியாத நிலை ஏற்படும்.

இனப்பிரச் சினைக்கான உயர் மட்டப் பேச்சுக்களில் முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வகை செய்யப்படவேண்டும்.

இப்படி ஜனுப் அஷ்ரப் சொன்னுர்.

(இ-எ-14)

## ஜப்பானிய...

(8 ம்பக்கத் தொடர்ச்சி)

களப்பு, ரெட்பானு ஊழியரான திரு. ரி. செல்வராச குலசேகரம் ஆகியோரே அவர்கள்.

இலங்கையில் இருந்து பங்குபற்றும் ஏனைய இரண்டுபேர் சிங்களவர்.

மூன்ரும் உலக நாடுகளான சியராலியோன், நைஜீரியா, உகண்டா, தன்சானியா, சாம்பியா, சுவாஸிலாந்து. எல்சல்வடோர், இந்தியா, பங்களாதேஷ் தாய்லாந்து, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், கொரியா, பர்மா ஆகியவற்றைச் சேர்ந்த 37 பிரதிநிதிகளும் இக்கருத்தரங்கில் பங்குபற்றுவர்.

அடுத்த ஆண்டு ஏப்ரலில் ஆரம்பமாகும் இக் கருத்தரங்கு டிசம்பரில் முடிவடையும். (உ-எ)

## அக்கரைப்பற்றில்-.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியதாகவும் சில ஈ. பி ஆர். எல். எவ். இளைஞர்களை கைது செய்ததாகவும் அறியவருகிறது.

தொடர்ச்சியாக இரு பகுதியினருக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சமர் காரணமாக ஏற்பட்ட உயிர்ச்சேதம் பற்றி தெரியவில்லை. (இ-10)

## கோட்டை--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு லைசென்ஸ் கட்டணத்தை செலுத்தும் வரை இத்திட்டம் நடை முறைப்படுத்தப்படும்.

சகல வாகனங்களும் அப்படிச் செய்தன என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் தான் இம் மாதம் மூன்ரும் திகதிக்கு முன்னர் நடைமுறைபடுத்தப்பட்டு வந்த எரிபொருள்விநியோகமுறை மீண்டும்அமுலுக்குவரும்.

இந்தப் புதிய திட்டம் இன்று (திங்கள்)கொழும்பில் நடைபெறும் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப் பட்டு ஒரு முடிவு எடுக்கப்படும் என்று தெரியவருகிறது

### சமர்ப்பிக்க வேண்டியவை

எரிபொருள் பெர்மிட் பெற கீழ்க்கண்ட தஸ்தாவேஜுகளை வாகன உரிமையாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும்;

1 வாகனப்பதிவு
2. வருடாந்த லைஸன்ஸ் கட்டணம்
3. வீதிப் பெர்மிட்
4 வாகனங்களில் உள்ள வானெலிகளுக்கான லைஸன்சுகள்.
5. வாகனங்கள் ஓடத் தகுதி வாய்ந்தனவா என்பதை நிரூபிக்கும் அத்தாட்சி பத்திரம்.

(அ-ஐ-எ)

## அசோக--

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டும்.

இப்படி பிரதமர் ஆர். பிரேமதாச கதிர்காமம் புனிதத்தலம் [illegible] தெரிவித்தார். கதிர்காமத்தில் தாம் சாலை ஒன்றைத் திறந்து வைத்த பின்னர் பிரதமர் பேசினர்.

மக்களின் குறைகள், சந்தேகங்களைத் தீர்க்க மகாசங்கம் முன்னின்று [illegible] பிரதமர் கட்டுக்கொண்டார். (இ-எ)

# முறைப்பாடு செய்தவர் பொலீஸ் நிலையத்தில் சுட்டுக் கொலை!

கொழும்பு, ஜன 5 வெலிக்கடைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிந்து விட்டு வெளியே வந்த ஒருவர், நிலைப் படியில் வைத்து இனந்தெரியாத நபர் ஒருவரினுல் சுடப்பட்டார்.

ரஞ்சி என்ற அந்த நபர் சிங்களவர்.

சூடுபட்ட அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

சுட்டதாகக்கூறப்படும் நபர் மோட்டார் சைக்கிள் ஒன்றில் தப்பி ஓடி விட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் கடந்த சனி இரவு இடம் பெற்றது.

அரசியல் பகைமை காரணமாக இச் சம்பவம் இடம் பெற்றதாத் தெரிகிறது

(இ - ஐ - எ)

## "சம்திங்"

யாழ்ப்பாணம் ஜன 5 "சம்திங்" வழங்கும் வாகனங்கள் தடை முகாமில்சோதனை எதுவுமின்றி பயணத்தை தொடரமுடியும்

"சம்திங்" வழங்காத வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் தடை முகாமில் தாமதித்தே செல்கின்றன.

தடை முகாம் ஒன்றில் இந்த "சம்திங்" சம்பவங்கள் நடைபெற்று வருவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

(இ-10)

## கரைஒதுங்கின பிரேதங்கள்

யாழ்ப்பாணம் ஜன. 5 மாதகல் கடலில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தின் போது கடலில் குதித்த இரு போராளிகளின் சடலங்கள் நேற்று காரைநகரில் கரை ஒதுங்கின.

தமிழீழ ராணுவத்தினர் உரிய முறையில் இவற்றை நல்லடக்கம் செய்தனர் (ஒ)

## வடபகுதி---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யோகத்தைத் துண்டிக்க வேண்டும் என்று விசாரணை நடத்திய கமிட்டி சிபாரிசு செய்துள்ளது.

கமிட்டியின் அறிக்கை அரசாங்க உயர் பீடத்தால் பரிசீலனை செய்யப்படுவதாகவும். திருத்த வேலைகளை பொங்கலுக்குப் பின்னர் தொடங்கலாமா என்பது குறித்து ஆராயப்படுவதாகவும் மின்சக்தி அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது (இ-எ)

## அம்புலன்ஸ் சேவையும் பாதிப்பு

யாழ்ப்பாணம் ஜன 5 யாழ்-குடா நாட்டுக்கான எரிபொருள் தடை காரணமாக யாழ் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் சேவை, யாழ் மாநகர சபை வாகனச் சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன

இதன் காரணமாக வைத்தியர்களும் தற்பொழுது சைக்கிள்களையே நாடியுள்ளனர்.

வைத்தியசாலையில் இருந்து வீடுகளுக்கு சென்று வைத்திய நிபுணர்களை ஏற்றிவரும் அம்புலன்ஸ் சேவையும் எரிபொருள் இல்லாத காரணத்தால் நிறுத்தப்பட்டுள்ளது

இதேவேளை யாழ் மாநகர சபையின் குப்பை ஏற்றும் டிராக்டர் சேவையும்நிறுத்தப்பட்டுள்ளது.

(இ-10)

## யாழ்-கொழும்பு பஸ் சேவை பாதிப்பு இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 5 யாழ்-கொழும்பு தனியார் பஸ் சேவைகள் எதுவித தடங்கலுமின்றி நடைபெற்று வருகின்றன.

கொழும்பில் இருந்து யாழ்ப்பானம்வரும் மேற்படி பஸ்கள் தமதுபோக்குவரத்துக்கு தேவையான டீசலை டாங்கியில் நிரப்பி வருகின்றன.

இதனால் இச் சேவை எதுவித தடங்கலுமின்றி நடைபெற்று வருகிறது.

(இ-10)

## இந்திய---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களும் இலங்கை அரசும் நேரடிப் பேச்சுக்களை நடத்துவதன் மூலம் இனப்பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வு எதையும் காணமுடியாது.

இப்படி அமைச்சர் திருதாண்டமான் சொனுர்.

(இ-எ)

# கருணாநிதியை விடுதலை செய்ய வேண்டும் என்கிருர் கல்யாணசுந்தரம்

சென்னை, ஜன. 4 தமிழ்நாட்டில் அமைதி காத்திட தி.மு க. தலைவர் கருணாநிதியும் அவரின் தொண்டர்களும் உடனடியாக விடுவிக்கப் பட வேண்டும்.

இதனை தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் செய்ய வேண்டும்.

இப்படி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர எம். கல்யாணசுந்தரம் வேண்டுகோள் விடுத்திருக்கின்ருர்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்ட கலைஞர் கருணாநிதியும் அவரின் தொண்டர்களும் சென்னை மத்திய சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தற்போது தமிழ் நாட்டில் இடம்பெற்றுவரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளைத் தனிமைப்படுத்த தி மு.க. தலைவரும் தொண்டர்களும் சிறையில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று திரு. கல்யாணசுந்தரம் வலியுறுத்தினர். (இ-எ)

# உதைபந்தாட்ட தொடர்புகளைக் குடாநாட்டினுள் குறுக்கிக் கொள்ளக் கூடாது

## மத்தியஸ்தர் சங்கக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜன 5 உதைபந்தாட்டத் தொடர்புகளை நாம் குடாநாட்டுக்குள் குறுக்கிக்கொள்ளக் கூடாது அகில இலங்கை, அகில உலகத் தொடர்புகளை நாம் தண்டிக்கும்போது உதைபந்தாட்டத்தின் வளர்ச்சி குன்றுகிறது

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்க உபதலைவர்களில் ஒருவரான திரு எம் டி தம்பிராஜா இவ்வாறு பேசினுர்.

சங்கத்தலைவர் திரு. ஈ. கே. குமரய்யா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் தமது உரையில் உதைபந்தாட்டம் என்பது நிர்வாகம், பயிற்சி, மருத்துவஉதவி மத்தியஸ்தம் எனும் நான்கில் தங்கியுள்ளது.

மத்தியஸ்தம் இன்றி எந்த விளையாட்டும் இல்லை.

யாழ் உதைபந்தாட்ட மத்யஸ்தர்கள் சங்கம் சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸதர்கள் சங்கத்தின் பதிவுபெற்ற அகில இலங்கைரீதியான ஒரு சங்கம்.

இச்சங்கத்தை எந்த ஒரு தனிப்பட்ட சிலரின் சங்கங்கள் தடை செய்யவோ, இயங்கச் செய்யாது விடவோ முடியாது.

சர்வதேச தொடர்புகளோடே எமது உதைபந்தாட்டத்தை தமிழ் இளைஞர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும்.

இதன் மூலம் எமது விளையாட்டு வீரர்களை சர்வதேச உதைபந்தாட்ட வீரர்களாக நாம் உருவாக்கலாம்"

## டீசல் பதுக்கல்

கரவெட்டி ஜன.5 பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினுல் கண்டு பிடிக்கப்பட்டது.

கலிகைச் சந்தியில் ஒரு எரிபொருள் விற்பனை நிலையத்தில் இருந்த 10 லீட்டர் டீசலும் தெடுத்தனையில் ஒருவீட்டில் இருந்த டீசலுமே கைப்பற்றப்பட்டன.

(இ-70)

## தங்கக்கடத்தல் முறியடிப்பு

கொழும்பு ஜன, 5 கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து காட்மண்டு புறப்படவிருந்த மூன்று வெளிநாட்டுப் பயணிகள் தமது மலவாசலுக்குள் 4 கிலோ எடையுள்ள தங்கக்கட்டிகளை மறைத்து வைத்துக் கடத்த முயன்ற போது சுங்க அதிகாரிகளிடம் சிக்கினர்கள்.

இத் தங்கத்தின் பெறுமதி ஒரு கோடியே 60 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது,

(ஒ)

## பாராட்டுவிழா ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன 5 இசைவேந்தன் ஷண்முகரத்தினம் அவர்களை கௌரவிக்கும் வகையில் பாராட்டுவிழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. கர்நாடக இசை உலகில் நிலைத்த புகழ் பெற்ற ஷண்முகரத்தினம் அவர்களின் பாராட்டு விழா ஏற்பாடுகளை அவரது மாணவகர்களும் இசை அபிமானிகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

நோய்வசப்பட்டிருக்கும் ஷண்முகரத்தினம் அவர்களின் பாராட்டு விழாவில் பொற்கிழியும் வழங்கப்படும் என விழா தொடர்பாக நிதி திரட்டிவரும் குழுவைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. சதா. ஸ்ரீனிவாசன் அறிவித்தார். (ஒ)

## காரைதீவில் நடந்தமோதல்

அம்பாறை, ஜன. 5 காரைதீவுக் கிராமத்தில் நேற்று மாலை ஆயுத படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றதாக அங்கிருந்துவந்த செய்திகள் தெரிவித்தன.

பெரும் குண்டு வெடிச் சத்தங்கள் அப்பகுதியில் கேட்டன என்றும் பின்னர் ஹெலிக்கொப்டர் அப் பகுதிக்கு சென்று வட்டமிட்டதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (இ-எ-14)

## வல்வையில்----

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் வல்வை இராணுவ முகாமை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தினர்.

அதிகாலை வல்வை முகாமுக்கு ஹெலிக்கொப்டர் வந்ததால் சிப்பாய்கள் காயம் அடைந்திருக்கிலாம் என்று நம்பப்படுகிறது.

சிப்பாய்களின் ஷெல் தாக்குதலால் மயிலியதனையில் இருமாடிக் கட்டடம் ஒன்று சேதமடைந்தது. (இ-160)

## நாவற்குழி---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வம் நடந்தது.

பற்றைகள் துப்பரவு செய்வது போல் பாசாங்கு செய்து வெளியேறி வந்த சிப்பாய்கள் புலிகளின் சென்றியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனை அடுத்து உசாரடைந்த விடுதலைப்புலிகள் அவர்களை நோக்கி கிரேனைட் தாக்குதல் மேற் கொண்டனர்.

அதன் பின்னர் சிப்பாய்கள் முகாமுக்கு திரும்பிச் சென்றனர்.

(இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org